இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

<u>பிறப்பிப்பவர்: முனைவர்.ஆ.அனிதா,</u>

<u>ந.க.எண்.000185/அ1/2021 நாள்.16.09.2021</u>

பொருள்:- பள்ளிக் கல்வி – அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு. சி.ஜெயவேல என்பவரின் வாரிசுதாரர் திரு. ஜெ. சீனிகுமார், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:-
1. வேலூர், மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 2530 / அ1/2015 நாள். 05.06.2017.
2. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(க்யூ1)துறை, நாள்.26.02.2021.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.21925/ஜே/இ4/2021 நாள்.09.04.32021.
4. முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை அவர்களின் ந.க.எண்.114/அ1/2019 நாள்.03.08.2021.

.......

இராணிப்பேட்டை மாவட்டம், திமிரி ஒன்றியம் பாத்திகாரன்பட்டி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமையாசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 30.06.2003 அன்று காலமான திரு. சி. ஜெயவேலு, என்பவரின் வாரிசுதாரர் திரு. ஜெ. சீனிக்குமார், என்பவருக்கு பார்வை 1-இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 07.06.2017 முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை2-இல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2 இல் கீழ்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரண்முறைப்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

..2..

(5.2) மேலே பத்தி 5.1 இல் உள்ள ஆணையினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One Level Higher than the Appointing Authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 2 - இல் காணும் அரசாணையின்படியும், பார்வை 4 - இல் காணும் கடிதத்தில் நியமன அலுவலரின் பரிந்துரையின் பேரில் திரு. ஜெ. சீனிக்குமார், என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 07.06.2017 முற்பகல் முதல் பணி வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

மேற்படி, திரு. ஜெ. சீனிக்குமார், பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு- பணிப்பதிவேடு

16/9/21

முதன்மைக்கல்வி அலுவலர்
இராணிப்பேட்டை 632 401.

16/9/21

பெறுநர்

சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)

நகல்

முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இராணிப்பேட்டை.